
## வடசென்னையில் தூர்வாரும் பணிகள்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!









துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கேப்டன் காட்டன் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை டான்பாஸ்கோ பள்ளி அருகில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, மரு.கலாநிதி வீராசாமி எம்.பி., ஆர்.டி.சேகர், ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாநகராட்சி ஆணையர்ஜெ.குமரகுருபரன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன், நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு மற்றும் நிதி) திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், துணை ஆணையர்கள்சிவ.கிருஷ்ணமூர்த்தி,(பணிகள்),கட்டா ரவி தேஜா,(வடக்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# எந்த அளவுக்கு மழை பெய்தாலும் எதிர்கொள்ள அரசு தயார்!

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வுக்குப்பின் தகவல்!

**சென்னை,அக்.28-**

**பருவமழை பாதிப்பு குறித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். எந்த அளவுக்கு மழை பெய்தாலும் அதனை எதிர்கொள்ள அரசு தயார் எனக் குறிப்பிட்ட அவர் சென்னையின் முக்கிய பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டு துரித நடவடிக்கைக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

சென்னையில் பருவமழை பாதிப்பில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு, சென்னையில் பல இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டார். அப்போது அவர் பருவமழையையொட்டி நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்து, அதன் விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்..

அப்போது அவர், ``அனைத்து கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளை 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டும். மழைப்பொழிவு கூடுதலாக இருந்தாலும் அதனை சமாளிக்கக் கூடிய வகையில் துரித நடவடிக்கைகளும், முன்னெச்சரிக்கைப் பணிகளும் இருக்க வேண்டும்" என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வுகளை மேற்கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பேட்டி வருமாறு:

வடசென்னை, திருவள்ளூர் பகுதிகளில் 5 செ.மீ முதல் 8 செ.மீ வரை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கு இணங்க நானும், நம் அமைச்சர்கள், மேயர், துணை மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், மாநகராட்சி ஆணையர்கள் எல்லோரும் இந்தப் பணிகளை ஆய்வு செய்து வருகிறோம்.

### 3 ½ லட்சம் டன் கழிவுகள்

வடசென்னையைப் பொறுத்தவரை 18 கால்வாய்கள், 13 குளங்கள் சென்னை மாநகராட்சி மூலமாக தூர்வாரப்பட்டு உள்ளன. 331 கிலோ மீட்டர் நீளம் வரை கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. 3½ லட்சம் டன் கழிவுகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் இந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பாக, சமூக வலைதளங்களில் பொதுமக்கள் அளிக்கின்ற புகார்களை உடனடியாக கவனிக்க ஆணையிட்டுள்ளார்.

### அரசு தயார்

அதன்படிதான் வியாசர்பாடி, அம்பேத்கர் கல்லூரி குளம், கேப்டன்-காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் ஆகியவற்றை இன்றைக்கு ஆய்வு செய்துள்ளோம். அடுத்த 10 நாட்களுக்கு மிகப் பெரிய மழை இருக்காது என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. ஆனால், எந்த அளவுக்கு மழை பெய்தாலும் அவற்றையெல்லாம் எதிர்கொள்வதற்கு முதலமைச்சர் தலைமையிலான நம் அரசு தயாராக இருக்கிறது.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சூளைமேடு மேற்கு நமச்சிவாயபுரம் பகுதியில் விருகம்பாக்கம் கால்வாய் கூவம் ஆற்றில் சேரும் இடத்தில் ஆற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அகலப்படுத்தும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிராபாகர ராஜா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சூளைமேடு மேற்கு நமச்சிவாயபுரம் பகுதியில் விருகம்பாக்கம் கால்வாய் கூவம் ஆற்றில் சேரும் இடத்தில் ஆற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அகலப்படுத்தும் பணிகளை நெல்சன் மாணிக்கம் சாலை பாலத்தில் இருந்து பார்வையிட்டார். உடன் மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிராபாகர ராஜா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.